Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லம்
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935



## மதுரவாயல்-துறைமுகம் இடையே பறக்கும் மேம்பால சாலை திட்டம் 2024 டிசம்பருக்குள் நிறைவடையும்: நிதின் கட்கரி தகவல்



சென்னை, அக்டோபர் 04 2022: சென்னை மதுரவாயல்-துறைமுகம் இடையே பறக்கும் மேம்பாலச் சாலைத் திட்டம், 2024 டிசம்பருக்குள் நிறைவடையும் என்று மத்திய அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

சென்னை துறைமுகத்துக்கு சரக்குகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அத்துடன் கால தாமதமும் ஏற்படுகிறது. இதற்கு தீர்வு காணும் வகையில், சரக்கு வாகனங்கள் செல்ல வசதியாக, சென்னை துறைமுகத்தில் இருந்து மதுரவாயலுக்கு உயர்மட்ட விரைவு சாலை அமைக்க கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் (2006-2011) முடிவு செய்யப்பட்டது. இதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டு, கூவம் ஆறு மற்றும் தேசிய நெடுஞ்சாலை மீது 19 கி.மீ. தூரத்துக்கு 6 வழிச் சாலையாக அமைக்க திட்டமிடப்பட்டது. சாலைக்கான திட்ட செலவு, நிலம் கையகப்படுத்துதல் (ரூ.310 கோடி) உட்பட ரூ.1,655 கோடி என மதிப்பிடப்பட்டது.

கடந்த 2009 ஜனவரி மாதம் அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் இத்திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார். இதையடுத்து, பணிகள் தொடங்கப்பட்டு ஆங்காங்கே தூண்களும் அமைக்கப்பட்டன. 2013ல் இத்திட்டத்தை முடிக்க திட்டமிடப்பட்டது. இந்நிலையில், 2011ல் ஆட்சிக்கு வந்த அண்ணா தி.மு.க., கூவம் ஆற்றின் வழித்தடத்தை மாற்றும் வகையில் இருப்பதாக கூறி இத்திட்டத்துக்கு தடை விதித்தது.

இந்நிலையில், 2021ல் மீண்டும் ஆட்சிக்கு வந்த தி.மு.க., இத்திட்டத்தை சிறு சிறு திருத்தங்களுடன் செயல்படுத்த முடிவு செய்தது. இதன்படி, "சென்னை துறைமுகம் - மதுரவாயல் இடையிலான உயர்மட்ட விரைவு சாலை திட்டம் செயல்படுத்தப்படும்" என்று நடப்பு 2022-23 நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டில் தமிழக நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அறிவித்தார். இதற்கு மத்திய அரசும் ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி கடந்த மே மாதம் அடிக்கல் நாட்டினார்.

திருத்தம் செய்யப்பட்ட திட்டத்தின்படி, 20.56 கி.மீ. தூரத்துக்கு உயர்மட்ட சாலை அமையும். ஏற்கெனவே 6 வழிச் சாலையாக அமைக்க திட்டமிடப்பட்ட நிலையில், இப்போது 4 வழிப்பாதையாக மாற்றப்படுகிறது. இதில் துறைமுகம் முதல் கோயம்பேடு வரையில் 2 அடுக்கு சாலை அமைய உள்ளது. இதில் கீழ் அடுக்கில் இருசக்கர வாகனங்கள், கார் உள்ளிட்டவையும், மேல் அடுக்கில் துறைமுகம் செல்லும் கனரக வாகனங்களும் செல்லும். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், தமிழக அரசு, தேசிய நெடுஞ்சாலை ஆணையம், சென்னை துறைமுக கழகம், இந்திய கடற்படை இடையே கடந்த மே மாதம் கையெழுத்தானது.

இதன்படி, ரூ.5,855 கோடி செலவில் 20.56 கி.மீ. நீளத்துக்கு உயர்மட்ட விரைவு சாலை அமைக்கப்படுகிறது. தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இப்பணிகளை மேற்கொள்ள உள்ளது.

இத்திட்டம் குறித்து மத்திய சாலை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி நேற்று தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:-

புதிய இந்தியாவில் பல்நோக்கு சாலை இணைப்பு வசதியை வழங்க மத்திய அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது. இதன்படி, தமிழகத்தின் சென்னை துறைமுகம் முதல் மதுரவாயல் வரையிலான உயர்மட்ட சாலை திட்டம் சுமார் ரூ.5,800 கோடி மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகிறது. 20.56 கி.மீ. நீளம் கொண்ட இந்த சாலை 4 வழிப்பாதையாக இருக்கும். சென்னை துறைமுகத்தின் உட்புறத்தில் தொடங்கும் இந்த சாலை மதுரவாயலில் முடிவடையும். இத்திட்டம் வரும் 2024 டிசம்பருக்குள் முடிக்கப்படும்.

சென்னை துறைமுகத்துக்கு சரக்குகளை ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்களுக்காக பிரத்யேகமாக இந்த சாலை கட்டமைக்கப்படுகிறது. இதன்மூலம் துறைமுகத்தின் சரக்கு கையாளும் திறன் 48 சதவீதம் அதிகரிக்கும். இதுபோல, துறைமுகங்களில் வாகனங்கள் காத்திருப்பது 6 மணி நேரம் வரை குறையும். பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு, நாட்டின் பொருளாதாரத்தை மேலும் ஊக்குவிக்கும் வகையில் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களை விரைவாக செயல்படுத்தி வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் வலியுறுத்தியதையடுத்து மியான்மரில் மோசடி கும்பலிடம் சிக்கி தவித்த 13 தமிழர்கள் மீட்பு





சென்னை, அக்டோபர் 04 2022: மியான்மரில் மோசடி கும்பலிடம் சிக்கிய தமிழர்களில் 13 பேர் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் மூலம் மீட்கப்பட்டு விமானம் மூலம் இன்று இரவு தமிழகம் அழைத்துவரப்படுகிறார்கள்.

மியான்மர் நாட்டில் சுமார் 50 தமிழர்கள் உட்பட சுமார் 300 இந்தியர்கள் கடுமையான இன்னல்களுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் தனியார் ஆட்சேர்ப்பு முகமைகள் மூலம் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான வேலைகளுக்காக தாய்லாந்து நாட்டிற்குச் சென்று இருக்கிறார்கள். ஆன்லைனில் சட்டவிரோத வேலைகளை மேற்கொள்ளும் பொருட்டு அவர்கள் அங்கிருந்து மியான்மருக்கு கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்லப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. மேலும், அவர்கள் அத்தகைய சட்டவிரோத வேலைகளை செய்ய மறுத்ததால் வேலையளிப்போரால் கடுமையாகத் தாக்கப்படுகிறார்கள் என தெரிய வந்தது.

இந்த நிலையில் மியான்மரில் சட்டவிரோதமாக சிறைப்பிடிக்கப்பட்டுள்ள தமிழர்களின் அவலநிலையைக் கருத்தில் கொண்டு உடனடியாக அவர்களை மீட்பதற்கும், பாதுகாப்பாக தாயகத்திற்கு திரும்ப அழைத்துவரவும், மியான்மரில் உள்ள தூதரகத்திற்கு இப்பிரச்சினை குறித்து விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார். முதல்வரின் கோரிக்கையை ஏற்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தமிழர்களை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளது.

முதற்கட்டமாக மோசடி கும்பலில் சிக்கிய 13 தமிழர்களும் மீட்கப்பட்டு தாய்லாந்து அழைத்து வரப்பட்டனர். பாங்காங்கில் இருந்து 13 தமிழர்களும் விமானம் மூலம் புறப்பட்டு இன்று இரவு சென்னை திரும்புகின்றனர்.

## 'நீட்' விடைத்தாள்களில் உள்ள குளறுபடியை சரிபார்க்க, மாணவிக்கு காட்ட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



சென்னை, அக்டோபர் 04 2022: நீலகிரி மாவட்டத்தை சேர்ந்த கிறிஸ்மா விக்டோரியா என்கிற மாணவி, சென்னை உயர்நீதிமன்றத்தில், 'நீட்' தேர்வு விடைத்தாள்கள் திருத்தப்பட்டதில் குளறுபடிகள் இருப்பதாக மனு தாக்கல் செய்திருந்தார்.

மாணவி கிறிச்மா தாக்கல் செய்திருந்த மனுவில், "கடந்த ஜூலை மாதம் 'நீட்' தேர்வு நடத்தப்பட்டது. இதற்கான விடைத்தாள்கள் ஜூலை 31 ஆம் தேதி வெளியிடப்பட்டது. அதில் 720 மதிப்பெண்களுக்கு 196 மதிப்பெண்கள் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

பின்னர் செப்டம்பர் 7 ம் தேதி வெளியிடப்பட்ட 'நீட்' தேர்வு மதிப்பெண் பட்டியலில் 65 மதிப்பெண்கள் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. இதனால் தான் மிகவும் குழப்பத்தில் உள்ளதாகவும் இதில் எந்த மதிப்பெண் சரியானது என தனக்கு தெரிய வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.


நீதிமன்றம் உத்தரவு

மேலும், தனது விடைத்தாள் முறையாக மதிப்பிடப்பட்டுள்ளதா? என்பதைச் சரி பார்க்கவும் அனுமதிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்த மாணவி, அவரது அசல் விடைத்தாளைக் காண்பிக்க தேசிய தேர்வு முகமைக்கு உத்தரவிட வேண்டும்" என்றும் தனது மனுவில் கோரியிருந்தார்.

இந்நிலையில் இந்த மனு நீதிபதி சுரேஷ்குமார் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. தேசிய தேர்வு முகமை தரப்பில், மனுதாரர் நொய்டாவில் உள்ள தேசிய தேர்வு முகமை அலுவலகத்துக்கு வருகை தந்தால் விடைத்தாளைச் சரி பார்ப்பதற்காக தர தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நொய்டாவில் உள்ள தேசிய தேர்வு முகமையில் விடைத்தாளை காண்பிப்பதற்கான தேதியை, அடுத்து வரும் 10 நாட்களில் நிர்ணயித்து மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும் என தேசிய தேர்வு முகமைக்கு நீதிபதி சுரேஷ்குமார் உத்தரவிட்டார். அந்த தேதியில் நொய்டா வரும் மாணவிக்கு அசல் விடைத்தாளை தேசிய தேர்வு முகமை காண்பிக்க வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.

## தூய்மை நகரங்கள் பட்டியலில் கடைசி இடம் பிடித்த சென்னை, மதுரை



சென்னை, அக்டோபர் 04 2022: தூய்மை நகரங்கள் என 45 நகரங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் கடைசி இடத்தில் சென்னை, மதுரை நகரங்கள் இடம் பிடித்துள்ளன.

மத்திய அரசின் வீடு மற்றும் நகர்ப்புற அமைச்சகம், 'ஸ்வச் சர்வேக்ஷன்' திட்டத்தின் கீழ் கடந்த 2016ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் உள்ள தூய்மையான நகரங்களின் பட்டியலை வெளியிட்டு வருகிறது.

அதில் 10 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையில் மொத்தம் 45 நகரங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

அதில் மத்திய பிரதேச மாநிலத்தின் இந்தூர் 7 ஆயிரத்து 146 மதிப்பெண் பெற்று முதலிடத்தை பிடித்தது. 6 ஆயிரத்து 924 மதிப்பெண்களுடன் குஜராத்தின் சூரத் 2வது இடத்தையும், 6 ஆயிரத்து 852 மதிப்பெண் எடுத்து மும்பையின் நவி மும்பை 3வது இடத்தையும் பிடித்தன. அதில் கோவை 42-வது இடத்தையும், சென்னை 44வது இடத்தையும், கடைசி இடமான 45வது இடத்தை மதுரையும் பெற்றுள்ளன.

கடந்த 2016ம் ஆண்டு மொத்தம் இந்தியாவில் 73 நகரங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அந்த ஆண்டில் முதல் இடத்தை மைசூரும், சண்டிகர் 2வது இடத்தையும், திருச்சி 3ம் இடத்தையும் பிடித்தன. கோவை 18வது இடத்தையும், மதுரை 26வது இடத்தையும், சென்னை 37வது இடத்தையும் பிடித்தன.

2017ம் ஆண்டு 434 நகரங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அதில் முதலிடத்தை இந்தூரும், 2ம் இடத்தை போபாலும், 3வது இடத்தை விசாகபட்டினமும் பிடித்தன.

2021ம் ஆண்டு 1 லட்சத்திற்கு மேலான மக்கள் தொகை கணக்கீட்டின்படி பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் இந்தூர் முதலிடத்தையும், சூரத் 2வது இடத்தையும், நவி மும்பை 3வது இடத்தையும் பிடித்தன. இந்த பட்டியலில் தமிழக நகரங்கள் எதுவும் இடம் பெறவில்லை.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# சென்னை-டெல்லி இடையே இயக்கப்படும் எக்ஸ்பிரஸ் ரெயில்களின் வேகம் அதிகரிப்பு



சென்னை, அக்டோபர் 04 2022: சென்னை-டெல்லி இடையே இயக்கப்படும் எக்ஸ்பிரஸ் ரெயில்களின் வேகம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் நலனை கருத்தில் கொண்டு புதிய நடைமுறை திட்டங்களை அமல்படுத்த ரெயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது. அந்த வகையில் தண்டவாளங்கள் மேம்படுத்தப்பட்டு ரெயில்கள் 130 கி.மீ வேகத்தில் செல்லும் வகையில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் அக்டோபர் 1-ந்தேதி முதல் ரெயில் சேவைகளின் வேகம் அதிகரிக்கப்பட்ட ரெயில்கள் கீழ்வருமாறு:-

* சென்னை-டெல்லி இடையே இயக்கப்படும் கிராண்ட் டிரங் எக்ஸ்பிரஸ் பயண நேரம் 90 நிமிடங்கள் குறைக்கப்பட்டுள்ளது.

* சென்னை-டெல்லி இடையே இயக்கப்படும் தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் பயண நேரம் 70 நிமிடங்கள் குறைக்கப்பட்டுள்ளது.

* திருப்பதி-சென்னை இடையே இயக்கப்படும் கருடாத்திரி எக்ஸ்பிரஸ் 20 நிமிடம் நேரம் குறைக்கப்பட்டது.

* கோவை-சென்னை இடையே இயக்கப்படும் இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் 10 நிமிடம் சேவை நேரம் குறைக்கப்பட்டது.

* குஜராத் மாநிலம் அமதாபாத்-சென்னை இடையே இயக்கப்படும் 'ஹம்சபர்' எக்ஸ்பிரஸ் 25 நிமிடம் சேவை நேரம் குறைக்கப்பட்டது.

* குஜராத் மாநிலம் ஏக்தாநகர்-சென்னை எக்ஸ்பிரஸ் இடையே இயக்கப்படும் எக்ஸ்பிரஸ் 10 நிமிடம் சேவை நேரம் குறைக்கப்படுகிறது.

* சென்னை-செங்கோட்டை பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயில் சேவை 10 நிமிடம் சேவை நேரம் குறைக்கப்படுகிறது.

* கொல்லம்-எழும்பூர் இடையே இயக்கப்படும் எக்ஸ்பிரஸ் 15 நிமிடம் சேவை நேரம் குறைக்கப்படுகிறது.

இந்த ரெயில் சேவைகளின் வேகம் அதிகரிக்கப்பட்டுள்ளதால், இந்த தடங்களில் பயணிக்கும் ரெயில் பயணிகளின் பயண நேரம் குறைந்துள்ளது.

# குடியரசுத் தலைவரை அவமதித்த டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் : துணை நிலை ஆளுநர் சக்சேனா காட்டம்



சென்னை, அக்டோபர் 04 2022: குடியரசுத் தலைவரை டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் அவமதித்து விட்டதாக, துணை நிலை ஆளுநர் சக்சேனா கடிதம் எழுதி உள்ளார்.

மகாத்மா காந்தி மற்றும் லால்பகதூர் சாஸ்திரி ஆகியோரின் பிறந்தநாளை முன்னிட்டு, அக்டோபர் 2 ம் தேதி ராஜ்காட் மற்றும் விஜய்காட் பகுதியில் அஞ்சலி நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த இரண்டு இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியிலும், டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் அவரது அமைச்சரவை சகாக்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. அரவிந்த் கெஜ்ரிவாலின் இந்த நடவடிக்கை குறித்து, துணை நிலை ஆளுநர் வி.கே. சக்சேனா கெஜ்ரிவாலுக்கு எழுதியுள்ள கண்டன கடிதத்தில் கூறி இருப்பதாவது:ஞ

அரசு சார்பாக முன்னாள் பிரதமர் பாரத் ரத்னா லால்பகதூர் சாஸ்திரி நினைவிடமான விஜய் காட் பகுதிக்கு வந்த டெல்லி துணை முதலமைச்சர் மனிஷ் சிசோடியா சிறிது நேரம் செயலற்ற நிலையில் இருந்துவிட்டு, குடியரசு தலைவர் வருகைக்கு முன்பே அங்கிருந்து சென்றுவிட்டார்.

அவமதிக்கும் செயல்

துணை முதலமைச்சரின் இந்த செயல் நெறிமுறைகளை மீறிய செயல். இவ்விரு நிகழ்ச்சியிலும் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கலந்து கொள்ளாதது வன்மையான கண்டனத்துக்கு உரியது. இது குடியரசு தலைவரை அவமதிக்கும் செயல் என்று காட்டமாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள ஆம் ஆத்மி கட்சி, அக்டோபர் 2 ம் தேதி அரவிந்த் கெஜ்ரிவால் குஜராத்தில் இருந்தார். அதற்கு முன்தினம் குஜராத்தில் பிரதமர் கலந்துகொண்ட பொதுக் கூட்டத்திற்கு காலியான சேர்கள் இடம் பெற்றிருந்த நிலையில், கெஜ்ரிவால் கூட்டத்திற்கு மக்கள் திரளாக கலந்து கொண்டதே சக்சேனாவின் இந்த கடிதத்திற்கு காரணம் என்று டெல்லி ஆம் ஆத்மி கூறி உள்ளது.

# தங்கம் விலை ஒரே நாளில் சவரனுக்கு ரூ.560 அதிகரிப்பு




சென்னை, அக்டோபர் 04 2022: சென்னையில் ஆபரணத்தங்கத்தில் விலை இன்று ஒரே நாளில் சவரனுக்கு ரூ.560 உயர்ந்துள்ளது.

சென்னையில் தங்கம் விலை கடந்த சில நாட்களாகவே ஏற்ற, இறக்கத்துடன் காணப்படுகிறது. நேற்று ஒரு சவரன் ஆபரணத்தங்கத்தின் விலை ரூ.120 உயர்ந்து ரூ.37 ஆயிரத்து 640க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்த நிலையில், இன்று சவரனுக்கு அதிரடியாக ரூ.560 உயர்ந்துள்ளது. தற்போது ஒரு சவரன் ஆபரணத்தங்கம் ரூ.38,200க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதேபோல ஒருகிராம் தங்கம் ரூ.70 உயர்ந்து 4 ஆயிரத்து 775 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வெள்ளி விலையும் அதிரடியாக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ வெள்ளி 66 ஆயிரத்து 700 ரூபாயும், ஒருகிராம் 66.70 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# கொள்ளிடம் ஆற்றில் மூழ்கிய 6 பேரின் சடலம் மீட்பு



சென்னை, அக்டோபர் 04 2022: கொள்ளிடம் ஆற்றில் மூழ்கிய 6 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் சிலுவைப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் சார்லஸ் (வயது 58). அவருடைய சகோதரர்கள் பிரதீவ் ராஜ் (36), பிரவீன் ராஜ் (19), தாவீது ராஜ் (30), மற்றும் ஈசாக் (39), தெர்மஸ் (19) உட்பட 52 பேரை கொண்ட குழுவினர் தஞ்சை மாவட்டம் பூண்டி மாதா பேராலயத்தில் பிரார்த்தனை செய்வதற்காக நேற்று முன்தினம் மாலை ஒரு பஸ்சில் ஆன்மிக சுற்றுலாவாக வந்தனர். பின்னர், மாதாவை தரிசனம் செய்த அவர்கள் இரவில் அங்கேயே தங்கினர்.

இந்த நிலையில் நேற்று காலை சார்லஸ், பிரதீவ்ராஜ், பிரவீன்ராஜ் உள்பட 6 பேர் மாதா கோவில் அருகே உள்ள கொள்ளிடம் ஆற்றில் இறங்கி குளித்தனர். திடீரென தண்ணீரின் வேகம் அதிகரித்ததால் அவர்கள் 6 பேரும் ஆற்றில் தத்தளித்தனர். இதை அந்த வழியாக வந்த மாட்டு வண்டி உரிமையாளர் செல்வம் என்பவர் பார்த்து உடனடியாக ஆற்றில் குதித்து அவர்களை காப்பாற்ற முயன்றார். ஆனால் அவரால் காப்பாற்ற முடியவில்லை. அவர்கள் 6 பேரும் ஆற்றில் மூழ்கி மாயமாகினர்.

இது குறித்து தகவல் அறிந்த திருக்காட்டுபள்ளி தீயணைப்பு துறையினர், போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். இதையடுத்து தீயணைப்பு துறையினர் ஆற்றில் குதித்து 6 பேரையும் தேடினர்.

இதில் சார்லஸ், அவருடைய தம்பி பிரதிவ்ராஜ் உடல்களை தீயணைப்பு வீரர்கள் நீண்ட போராட்டதுக்கு பின்னர் மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர். இதைத்தொடர்ந்து மாயமான மற்றவர்களையும் தீயணைப்பு வீரர்கள் ரப்பர் படகுகள் மூலம் தேடினர்.

தீவிர தேடுதலுக்கு பின்னர் மதியம் 2.15 மணி அளவில் சகோதரர்களின் ஒருவரான தாவிதுராஜ் என்பவரும், மாலை 3.30 மணி அளவில் பிரவீன்ராஜ்(19) என்பவரும் பிணமாக மீட்கப்பட்டனர். அவர்களது உடல்களை பிரேத பரிசோதனைக்காக திருவையாறு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து மற்ற 2 பேருடைய உடல்களையும் தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. மீட்பு பணிகளை தஞ்சை மாவட்ட கலெக்டர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் பலியானவர்களின் உறவினர்களுக்கு கலெக்டர் ஆறுதல் கூறினார்.

4 பேர் சடலமாக மீட்கப்பட்ட நிலையில் இன்று காலை மேலும் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். தொடர்ந்து தேடும் பணியை போலீசார் தீவிரப்படுத்திய அடுத்து 6வது நபரின் சடலமும் பகலில் மீட்கப்பட்டது. நீரில் மூழ்கிய இடத்திலிருந்து 1.5 கி.மீ. தூரத்தில் 6வது நபரின் சடலம் மீட்கப்பட்டது.

ஆன்மீக சுற்றுலாவுக்கு உடன் வந்தவர்கள் ஆற்றில் மூழ்கி பலியானதால் சோகத்தில் இருந்த தூத்துக்குடியை சேர்ந்த சுற்றுலா பயணிகளை பூண்டி மாதா பேராலய அதிபர் சாம்சன், துணை அதிபர் ரூபன் அந்தோணி ராஜ் ஆகியோர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர்.

# 36 வது தேசிய விளையாட்டுப் போட்டி: 12 தங்கத்துடன் தமிழ்நாடு 38 பதக்கங்கள்



சென்னை, அக்டோபர் 04 2022: குஜராத்தில் நடைபெறும் 36-ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில், தமிழ்நாடு மொத்தம் 38 பதக்கங்களுடன் 5 வது இடத்தை பிடித்துள்ளது.

இந்தியாவின் ஒலிம்பிக் என்று அழைக்கப்படும் தேசிய விளையாட்டுப் போட்டிகள் 1924 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. 36-வது தேசிய விளையாட்டுப் போட்டி குஜராத் மாநிலத்தில் உள்ள ஆமதாபாத், காந்தி நகர், சூரத், வதோதரா, ராஜ்கோட், பவநகர் ஆகிய நகரங்களில் செப்டம்பர் 29 ந்தேதி தொடங்கி அக்டோபர் 12 ந்தேதி வரையில் நடந்து வருகிறது. நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், ராணுவத்தின் சர்வீசஸ் அணி ஆகிய அணிகளைச் சேர்ந்த 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

தமிழ்நாடு 5 வது இடம்

இதில் நீச்சல், தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, ஆக்கி, கைப்பந்து உள்பட 36 விளையாட்டுகளில் ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் போட்டிகள் நடத்தப்படுகிறது. கோகோ, யோகா, மல்லர் கம்பம் ஆகியவை அறிமுக போட்டியாக இதில் இடம் பெற்றுள்ளனது.

இந்த போட்டிகளில் இந்திய ராணுவத்தின் சர்வீசஸ் அணி 32 தங்கம், 18 வெள்ளி, 18 வெங்கலம் என மொத்தம் 68 பதக்கங்களுடன் முதலிடத்தை பிடித்துள்ளது. இரண்டாவது இடத்தில் உள்ள அரியாணா மாநிலம் 28 தங்கம், 20 வெள்ளி, 15 வெங்கலம் என மொத்தம் 58 பதக்கங்கள் வென்றுள்ளது. 3 வது இடத்தில் 60 பதக்கங்களுடன் மகாராஷ்டிரா இடம் பிடித்துள்ளது. அந்த மாநிலம் 14 தங்கம், 15 வெள்ளி, 31 வெங்கலப் பதக்கங்களை பெற்றுள்ளது. உத்தரபிரதேசம் 14 தங்கம், 12 வெள்ளி, 9 வெங்கலம் என மொத்தம் 35 பதக்கங்களை பெற்று 4 வது இடம் பிடித்துள்ளது.

தமிழ்நாடு சார்பாக சென்ற வீரர்கள் நேற்று வரையில் 38 பதக்கங்களை வென்று 5 வது இடத்தை பிடித்துள்ளனர். இதில் 12 தங்கம் 12 வெள்ளி, 14 வெங்கலப் பதக்கங்களை தமிழ்நாட்டு வீரர்கள் வென்றுள்ளனர்.

# பந்தலூர் அருகே சுருக்கில் சிக்கிய சிறுத்தை பலி



சென்னை, அக்டோபர் 04 2022: நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே அத்திச்சால் பகுதியில், மேத்யூ என்பவரின் தோட்டத்தில் வேட்டைக்கு வைத்திருந்த சுருக்கில் 5 வயதுடைய பெண் சிறுத்தை சிக்கியது.

இந்த நிலையில் வனத்துறையினர் சிறுத்தையை மீட்டு, முதுமலையில் சிகிச்சை அளித்தனர். சிறுத்தைக்கு ஏற்பட்ட காயங்களுக்கு மருந்து தடவப்பட்டது. பின்னர் எடுக்கப்பட்ட எக்ஸ்ரே எடுக்கப்பட்டதில் எலும்பு முறிவு மற்றும் நரம்பு மண்டலத்தில் காயம் இருப்பதும் தெரிய வந்தது.

எக்ஸ்ரே பரிசோதனைக்கு பிறகு அதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டது. சிறுத்தையை இன்சுலேடிங் மீது வைத்து வெதுவெதுப்பான நீர் பைகளை உடலின் மேல் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது. இருப்பினும் அந்த சிறுத்தை சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# உக்ரைன்-ரஷியா இடையேயான பிரச்சினைக்கு அமைதி வழி தீர்வுக்கு உதவ இந்தியா தயார்- பிரதமர் மோடி உறுதி



சென்னை, அக்டோபர் 04 2022: உக்ரைன், ரஷியா இடையேயான போர் ஏழுரை மாதங்களுக்கு மேலாக நீடித்து வரும் நிலையில், பிரதமர் மோடி இன்று தொலைபேசி வாயிலாக உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. உக்ரைனில் நிலவி வரும் தற்போதைய சூழல் குறித்து இரு நாட்டு தலைவர்களும் விவாதித்தனர். பிரச்சினைக்கு ராணுவ ரீதியாக தீர்வு காண முடியாது என்றும், தூதரக ரீதியான அமைதி பேச்சுவார்த்தையை தொடர வேண்டியது அவசியம் என்றும் பிரதமர் அப்போது கூறினார். போர் நீடிப்பது அணுமின் நிலையங்களுக்கு ஆபத்தை விளைவிப்பதுடன், பேரழிவை ஏற்படுத்தும் என்றும் பிரதமர் மோடி தெரிவித்தார். ஐ.நா சாசனம், சர்வதேச சட்டம், அனைத்து நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றிற்கு மதிப்பளிக்க வேண்டியதன் முக்கியத்துவதும் குறித்து பிரதமர் எடுத்தரைத்தார். உக்ரைன் - ரஷ்யா இடையேயான பிரச்னைக்கு அமைதி வழியில் தீர்வு காண உதவுவதற்கு இந்தியா தயாராக இருப்பதாக மோடி அப்போது கூறியதாகவும் பிரதமர் அலுவலக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சென்னை வடபழனி முருகன் கோவிலில் ஆளுநர் ஆர்.என்.ரவி சாமி தரிசனம்



சென்னை, அக்டோபர் 04 2022: ஆயுதபூஜை கொண்டாட்டங்கள் தமிழகம் முழுவதும் இன்று வழக்கமான உற்சாகத்துடன் நடைபெற்றன. இந்நிலையில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி குடும்பத்துடன் சென்னை வடபழனி முருகன் கோவிலுக்கு வருகை தந்தார். பாரம்பரிய முறையில் பட்டு வேஷ்டி அணிந்து வந்த ஆளுநருக்கு கோவிலில் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது.

சிறப்பு தரிசன முறையில் சுமார் 20 நிமிடங்கள் வடபழனி முருகனை ஆளுநர் தரிசனம் செய்தார். மேலும், கோவிலில் வைக்கப்பட்டுள்ள நவராத்திரி கொலுவை குடும்பத்துடன் அவர் பார்த்து ரசித்தார். ஆளுநர் வருகையையொட்டி வடபழனி முருகன் கோவிலில், மாலை 3 மணியிலிருந்து கோபுர நுழைவாயில் வழியாக பக்தர்கள் செல்ல தடை விதிக்கப்பட்டது. கிழக்கு கோபுரம் வழியாக பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

# தசரா பண்டிகையை முன்னிட்டு நாளை முதல் சோதனை அடிப்படையில் 5ஜி சேவை- ஜியோ நிறுவனம் அறிவிப்பு



சென்னை, அக்டோபர் 04 2022: டெல்லியில் கடந்த ஒன்றாம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் 5ஜி சேவையை பிரதமர் மோடி அறிமுகம் செய்தார். முன்னதாக தீபாவளி முதல் நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் ஜியே 5ஜி சேவை வழங்கப்படும் என்றும் ரிலையன்ஸ் தலைவர் முகேஷ் அம்பானி தெரிவித்திருந்தார். இந்நிலையில் தசரா பண்டிகையான நாளை முதல் 4 நகரங்களில் சோதனை அடிப்படையில் 5ஜி சேவை அறிமுகப்படுத்தப்படும் என, ஜியோ நிறுவனம் அறிவித்துள்ளது. முதல் கட்டமாக மும்பை, டெல்லி, கொல்கத்தா மற்றும் வாரணாசியில் நாளை முதல் 5ஜி சேவை சோதனை அடிப்படையில் வழங்கப்படுகிறது. இந்த 4 நகரங்களில் ஜியோ வாடிக்கையாளர்கள் ஒரு ஜி.பி.பி.எஸ்க்கும் கூடுதலான வேகத்தில் எல்லையில்லா 5ஜி டேட்டாவைப் பெறுவார்கள் என்று ஜியோ நிறுவன அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்த சேவைகளைப் பெற புதிய சிம் தேவையில்லை எனவும் ஏற்கனவே உள்ள செல்போன்களில் ஜியோ 5ஜியை வழங்கும் வகையில் பணியாற்றி வருவதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. மற்ற நகரங்களுக்கான 5ஜி சேவை படிப்படியாக சோதனை அடிப்படையில் அமல்படுத்தப்படும் என ஜியோ அறிவித்துள்ளது. இந்த சேவை குறித்து ஜியோ வாடிக்கையாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்களின் அடிப்படையில் மேலும் சேவை வலுப்படுத்தப்படும் என்றும், 425 மில்லியனுக்கும் அதிகமான பயனர்களுடன், இந்தியாவின் மாற்றத்தை ஜியோ 5ஜி சேவை விரைவுபடுத்தும் என்றும் அந்நிறுவன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தாலிக்கு தங்கம் திட்டத்திற்கு மூடு விழா நடத்தி விட்டது திமுக அரசு- முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்



சென்னை, அக்டோபர் 04 2022: சென்னை ராயபுரத்தில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியுள்ளதாவது:- அதிமுக அரசு கொண்டு வந்த திட்டங்களுக்கு திமுக அரசு மூடு விழா நடத்தியுள்ளது. தாலிக்கு தங்கம் போன்ற நல்ல திட்டங்களை திமுக அரசு மூடி விட்டது. யானை பசிக்கு சோளப்பொறி போல, மாணவிகளுக்கு 1000 ரூபாய் உதவித் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. அரசு பேருந்தில் பெண்கள் ஓசியாக பயணிப்பதாக அமைச்சர் பொன்முடி கூறியதால் ஒவ்வொரு பெண்ணும் இலவசமாக பயணம் செய்ய அவமானப் படுகிறார்கள். ஓசி பயணம் என்று பேசிய அமைச்சரை, முதலமைச்சர் கண்டிக்காதது ஏன்? மேயரிடம் அமைச்சர் அதிகார தொனியில் பேசியது சரியானது அல்ல. அமைச்சர்கள் செய்யும் அடாவடிகளை ஊக்கப்படுத்தும் வகையில் தான் முதலமைச்சர் ஸ்டாலினின் செயல்பாடுகள் உள்ளன. ஓ.பி.எஸ்.க்கு தொண்டர்கள் ஆதரவு இல்லை. அறிக்கைகள், டிவிட்டரில் மட்டும் தான் அவர் செயல்படுகிறார். பருவமழை வரவுள்ளதால், மழை நீர்வடிகால் பணி குறித்து முதல்-அமைச்சர் ஸ்டாலின் கூறியது வெட்ட வெளிச்சத்திற்கு வரும். இவ்வாறு அவர் கூறினார்.

# உத்தரகாண்ட் மாநிலத்தில் பனிச்சரிவு- மலையேறும் வீரர்கள் 10 பேர் பலி: அமித்ஷா, ராகுல்காந்தி இரங்கல்





சென்னை, அக்டோபர் 04 2022: உத்தரகாண்ட் மாநிலம் உத்தர்காசி மாவட்டத்தில் மலையேறுதல் பயிற்சிக்கான அரசு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தை சேர்ந்த 34 பயிற்சி மலையேறு வீரர்கள், 7 பயிற்சியாளர்கள் என மொத்தம் 41 பேர் இமயமலையின் திரவுபதி கா தண்டா-2 சிகரத்தில் இருந்து பயிற்சியை முடித்துக் கொண்டு முகாமிற்கு திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது, திடீரென அந்த பகுதியில் பனிச்சரிவு ஏற்பட்டது. இதில் அவர்கள் அனைவரும் சிக்கிக் கொண்டனர். தகவலறிந்த இந்தோ-திபெத் எல்லைப் பாதுகாப்பு படையினர், தேசிய, மாநில பேரிடர் மீட்புக் குழுவினர் பனிச்சரிவில் சிக்கியவர்களை ஹெலிகாப்டர்கள் உதவியுடன் மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதையும் படியுங்கள்: தசரா பண்டிகையை முன்னிட்டு நாளை முதல் சோதனை அடிப்படையில் 5ஜி சேவை- ஜியோ நிறுவனம் அறிவிப்பு இந்த பனிச்சரிவில் சிக்கிய சிலர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில், 10 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 28 பேர் இன்னும் பனிச்சரிவில் சிக்கியுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த துயர நிகழ்விற்கு மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா வருத்தம் தெரிவித்துள்ளார். உத்தர்காசியில் ஏற்பட்ட பனிச்சரிவு சம்பவம் மிகவும் வருத்தமளிக்கிறது, இது தொடர்பாக அதிகாரிகளிடம் பேசினேன். உள்ளூர் நிர்வாகம், தேசிய பேரீடர் மீட்புக்குழு, இந்தோ-தீபெத் எல்லைப்பாதுகாப்பு படை மற்றும் ராணுவக் குழுக்கள் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளில் உடனடியாக ஈடுபட்டு வருகின்றன, இவ்வாறு அமித்ஷா தனது அதிகாரப்பூர்வ ட்விட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். இதேபோல் உத்தரகாண்ட் பனிச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு ராகுல்காந்தி இரங்கல் தெரிவித்துள்ளார். உத்தரகாண்ட் மாநிலத்தில் பனிச்சரிவு ஏற்பட்டு பல உயிர்களை பலி வாங்கியுள்ளது என்ற செய்தி வருத்தமளிக்கிறது. தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களின் குடும்பங்களுக்கு இதயப்பூர்வமான இரங்கல், காணாமல் போனவர்கள் பாதுகாப்பாக திரும்பவும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் பிரார்த்தனை செய்கிறேன். இவ்வாறு ராகுல் தெரிவித்துள்ளார்.

# கூவம் நதி சீர் செய்யப்பட்டு சென்னை, லண்டனுக்கு இணையாக மாற்றப்படும்- அமைச்சர் ஏ.வ.வேலு பேட்டி



சென்னை, அக்டோபர் 04 2022: சென்னை துறைமுகம் மற்றும் கொளத்தூர் சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் மழைக்கால வெள்ளத் தடுப்பு பணிகளை மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் சேகர்பாபு ஆகியோர் ஆய்வு செய்தனர். அதன் பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அமைச்சர் எ.வ.வேலு கூறியதாவது:- மழைநீர் வடிகால் பணிகளில் 10 சதவீதம் மட்டும் மீதமுள்ளன. அதை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒட்டு மொத்தமாக சென்னை மக்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட கூடாது என்பதற்காக அனைவரும் போட்டி போட்டுக் கொண்டு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த முறை சென்னையில் மழை வெள்ளம் ஏற்பட வாய்ப்பில்லை. மக்களுக்கு எந்த வித பாதிப்பும் இல்லாமல் மழைநீர் வடிகால் பணிகள் நிறைவடையும். கூவம் நதி சென்னை முழுவதும் ஓடும் நதி. மழை காலத்திற்கு பின்னர், கூவம் நதியை சீர் செய்யும் நடவடிக்கையை அரசு மேற் கொள்ளும். அதன் பிறகு லண்டனில் நாம் பார்ப்பதை போல் இங்கும் காண முடியும். மதுரவாயல்-துறைமுகம் மேம்பால விரைவு சாலையை 2024 ஆம் ஆண்டு திறக்கும் வகையில் பணிகள் நடைபெற உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ராமேஸ்வரம், தனுஷ்கோடி பகுதிகளில் காற்றாலைகள் அமைத்து மின் உற்பத்தி- மத்திய மந்திரி தகவல்





சென்னை, அக்டோபர் 04 2022: நெல்லை மாவட்டம் வள்ளியூர் அருகே வடலிவிளை பகுதியில் பிரேசில் நாட்டைச் சேர்ந்த நிறுவனம் 88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதிக மின் உற்பத்தி திறன் கொண்ட காற்றாலையை அமைத்துள்ளது . இதன் மூலம் 4.2 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த காற்றாலையை மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை இணை மந்திரி பகவந்த் கூபா இன்று பார்வையிட்டார். அந்த நிறுவன அதிகாரிகளிடம் காற்றாலையின் செயல்பாடு, உற்பத்தி செலவு உள்ளிட்ட விபரங்களை அவர் கேட்டறிந்தார். பின்னர் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது: இதையும் படியுங்கள்: சென்னை வடபழனி முருகன் கோவிலில் ஆளுநர் ஆர்.என்.ரவி சாமி தரிசனம் இந்திய கடலோரப் மின் உற்பத்திக்கான காற்று பகுதிகளில் 70 ஜிகாவாட் வளம் உள்ளது. குஜராத்திலும், தமிழ்நாட்டிலும் 35 ஜிகாவாட் அளவிற்கு காற்று வளம் உள்ளது. ராமேஸ்வரம், தனுஷ்கோடியில் இரண்டு காற்றாலைகளை அமைக்க உள்ளோம். இதன் மூலம் ராமேஸ்வரம் நகர் முழுவதும் மின்சார விநியோகிக்க முடியும். எதிர்காலத்தில் 7 மெகாவட் மின்சார உற்பத்தித் திறன் கொண்ட காற்றாலையை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 2030-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் மரபு சாரா எரிசக்தி மூலம் 500 ஜிகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப் இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதற்குப் போதுமான அளவு வாய்ப்பும், வளமும் இந்தியாவில் உள்ளது. சூரிய சக்தி மூலம் 300 ஜிகாவாட் மின்சாரமும் , பிற மரபு சாரா எரிசக்தி மூலம் 200 ஜிகாவாட் மின்சாரமும் உற்பத்தி செய்ய முடியும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



**புஸ்ஸி என். ஆனந்து பொதுச்செயலாளர் அகில இந்திய தலைமை தளபதி மக்கள் இயக்கம் சென்னை தனது அறிக்கையில்:- தளபதி விஜய்-ன் உத்தரவின்படி,**

**அகில இந்திய தளபதி விஜய் மக்கள் இயக்க தலைமை அலுவலகத்தில் பல்வேறு மாவட்ட தலைவர்கள்,அணித் தலைவர்கள் முன்னிலையில் அனைத்து மாநிலம்,மாவட்டம் மற்றும் வெளிநாடுகளுக்கான அதிகாரபூர்வமான இணையதள பக்கங்களின் துவக்க விழா நடைபெற்றது, மேலும் இவ்விழாவில் மக்கள் இயக்க நிர்வாகிகளுக்கு மதிய விருந்து வழங்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.**

# ஐசிஐசிஐ பேங்க் யுகே பிஎல்சி, இங்கிலாந்தில் உள்ள இந்திய மாணவர்களுக்கு வங்கிக் கணக்கு வசதியை வழங்குகிறது

சென்னை, அக்டோபர் 04 2022: ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட்டுக்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமான ஐசிஐசிஐ பேங்க் யுகே பிஎல்சி, இங்கிலாந்தில் படிக்க விரும்பும் இந்திய மாணவர்களுக்கு 'ஹோம் வாண்டேஜ் கரண்ட் அக்கவுண்ட்' (எச்விசிஏ) எனப்படும் உள்நாட்டு பலன்களுடன் கூடிய நடப்பு வங்கிக் கணக்கு வசதியை வழங்குகிறது. இங்கிலாந்தில் உள்ள ஒவ்வொரு இந்திய மாணவரின் வங்கித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் இது சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கணக்கு விசா டெபிட் அட்டையுடன் வழங்கப்படுகிறது. இதை உலகில் எங்கும் பயன்படுத்தலாம்.

இந்தியாவில் உள்ள சேமிப்புக் கணக்கிற்குச் இணையான கணக்கை, மாணவர்கள் இந்தியாவில் இருக்கும் போதே டிஜிட்டல் முறையில் உடனடியாகத் தொடங்கலாம். ஐசிஐசிஐ வங்கியின் கிளைக்கு நேரடியாகச் செல்லாமல் அவர்கள் ஆன்லைனில் அல்லது ஐசிஐசிஐ பேங்க் யுகே ஐமொபைல் செயலி மூலம் இதைச் செய்யலாம். கணக்கைத் திறந்தவுடன், அவர்கள் இணையதள வங்கி சேவை, மொபைல் வங்கி மற்றும் டெபிட் கார்டு ஆகிய வசதிகளைச் செயல்படுத்திக் கொள்ளலாம். டெபிட் எனப்படும் ஏடிஎம் அட்டை அவர்களின் விருப்பப்படி, இந்தியா அல்லது இங்கிலாந்தில் உள்ள அவர்கள் கொடுக்கும் முகவரிக்கு வழங்கப்படும்.

ஐசிஐசிஐ பேங்க் இந்தியா நிறுவனம், இங்கிலாந்திற்குச் செல்லும் மாணவர்களுக்கு ஆதரவாக ஒரு சிறந்த நடைமுறையை உருவாக்கியுள்ளது. இது அவர்களின் அனைத்து வங்கித் தேவைகளுக்கும் உதவும். கல்விக் கடன், பயண அட்டை, வங்கிக் கணக்குகள் மற்றும் இந்தியாவில் இருந்து இங்கிலாந்துக்கு பணப்பரிமாற்றம் அல்லது இந்தியாவில் இருந்து இங்கிலாந்துக்குப் பணப்பரிமாற்றம் உள்ளிட்டவற்றை மாணவர்கள் ஒரே முனையத்தில் இருந்து பெறலாம்.

ஐசிஐசிஐ பேங்க் யுகே பிஎல்சி-யின் சில்லறை வங்கி சேவைப் பிரிவுத் தலைவர் பிரதாப் சிங் கூறுகையில், "ஐசிஐசிஐ பேங்கே யுகே பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு தனிப்பட்ட, வணிக மற்றும் பெருநிறுவன வங்கி சேவைகளை இந்தியாவில் இருந்து இங்கிலாந்துக்குச் சென்ற மக்களுக்கு வழங்கி வருகிறது. மேற்படிப்புக்காக இங்கிலாந்துக்கு வரும் மாணவர்களின் தனித்துவமான வங்கித் தேவைகளைப் புரிந்துகொண்டு, அவர்களுக்கு வங்கிச் சேவையை சிரமமில்லாமல் வழங்க நாங்கள் முயற்சி செய்கிறோம். டிஜிட்டல் முறையில் கணக்குத் திறக்கும் வசதி, இந்திய மாணவர்கள் இந்தியாவில் இருக்கும் போதே இங்கிலாந்தில் உள்ள வங்கியில் சுலபமாகக் கணக்கைத் திறக்க உதவுகிறது. ஹோம் வாண்டேஜ் கரண்ட் அக்கவுண்ட்' (உள்ளூர் வசதிகளைப் பெறும் நடப்புக் கணக்கு) மற்றும் விசா டெபிட் அட்டை ஆகியவை இங்கிலாந்தில் அவர்களின் அன்றாட வங்கித் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள உதவுகிறது. இந்தியாவில் உள்ள மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர் ஐசிஐசிஐ வங்கியுடன் வலுவான தொடர்பைக் கொண்டுள்ளனர்.

இந்திய மாணவர்கள் இங்கிலாந்தில் படிக்கும் போது அவர்களின் வங்கித் தேவைகளையும், இந்தியாவில் உள்ள அவர்களது பெற்றோர்களின் வெளிநாட்டு வங்கித் தேவைகளையும் வசதியாகவும், பாதுகாப்பாகவும், வழங்க நாங்கள் காத்திருக்கிறோம்." என்றார்.

# அர்பன் க்ரூசர் ஹைரைடர் காரின் 7 மாடல்களின் விலையை வெளியிட்டது டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனம்



சென்னை, அக்டோபர் 04 2022: டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனம் அதன் அர்பன் க்ரூசர் ஹைரைடர் காரின் 4 மாடல்களுக்கான விலைகளை ஏற்கனவே வெளியிட்டது. இந்த நிலையில் அதன் அடுத்த 7 மாடல் கார்களுக்கான விலையை தற்போது அறிவித்துள்ளது.

இந்த கார்களின் எக்ஸ்-ஷோரூம் விலை குறித்த விவரம் வருமாறு:-

ஜி ஏடி 2டபிள்யூடி நியோ டிரைவ் - ரூ. 15,54,000, எஸ் ஏடி 2டபிள்யூடி நியோ டிரைவ் - ரூ. 13,48,000 மற்றும் வி எம்டி ஏடபிள்யூடி நியோ டிரைவ் - ரூ. 17,19,000, வி எம்டி 2டபிள்யூடி நியோ டிரைவ் - ரூ. 15,89,000, ஜி எம்டி 2டபிள்யூடி நியோ டிரைவ் - ரூ. 14,34,000, எஸ் எம்டி 2டபிள்யூடி நியோ டிரைவ் - ரூ. 12,28,000, இ எம்டி 2டபிள்யூடி நியோ டிரைவ் - ரூ. 10,48,000 ஆகவும் விலையை நிர்ணயித்து இந்நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த விலை இந்தியா முழுவதற்கும் பொருந்தும் என்றும் இந்நிறுவனம் கூறியுள்ளது. மேலும் வி இடிரைவ் 2டபிள்யூடி ஹைப்ரிட் - ரூ. 18,99,000, ஜி இடிரைவ் 2டபிள்யூடி ஹைப்ரிட் - ரூ. 17,49,000, எஸ் இடிரைவ் 2டபிள்யூடி ஹைப்ரிட் - ரூ. 15,11,000, வி ஏடி 2டபிள்யூடி நியோ டிரைவ் - ரூ. 17,09,000 என்றும் 4 மாடல் கார்களுக்கான விலையை ஏற்கனவே இந்நிறுவனம் வெளியிட்டது. இந்த நிலையில் தற்போது 7 மாடல் கார்களின் விலைகளும் வெளியாகி உள்ளது. இது குறித்து டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் விற்பனை மற்றும் மார்க்கெட்டிங் ஆலோசனைப் பிரிவு இணை துணைத் தலைவர் அதுல் சூட் இந்த விலைகளை அறிவித்து பேசுகையில், எங்களின் அர்பன் க்ரூசர் ஹைரைடர் கார் இந்தியாவில் அதன் முன்மாதிரியான செயல்திறன், சிறந்த எரிபொருள் திறன், பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் ஒரு புதிய அத்தியாயத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. வாடிக்கையாளர்களிடையே இதற்கான வரவேற்பு என்பது எங்களுக்கு மிகுந்த உற்சாகத்தை அளிக்கிறது. ஏற்கனவே அறிமுகம் செய்யப்பட்ட 4 மாடல் கார்களுக்கான விலை வாடிக்கையாளர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது, அதேபோல் தற்போது வெளியிடப்பட்டுள்ள 7 மாடல் கார்களின் விலைகளும் நல்ல வரவேற்பை பெறும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம் என்று தெரிவித்தார். இந்நிறுவனத்திலிருந்து மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்த எஸ்யூவி கார் கடந்த ஜூலை மாதம் முன்பதிவுடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இது செல்ப் சார்ஜிங் ஸ்ட்ராங் ஹைபிரிட் எலக்ட்ரிக் பவர்டிரெய்ன் மற்றும் நியோ டிரைவ் ஆகிய 2 வகைகளில் கிடைக்கிறது. இந்த கார்கள் வாடிக்கையாளர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. அதற்கு, அவர்கள் டொயோட்டா நிறுவனத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கை மற்றும் இந்நிறுவனத்தின் மேம்பட்ட தொழில்நுட்பத்தை காட்டுகிறது. மேலும் அர்பன் க்ரூசர் ஹைரைடர் கம்பீரமான தோற்றம் மற்றும் அதிநவீன வடிவமைப்பு மற்றும் மேம்பட்ட தொழில்நுட்ப அம்சங்களுடன் டொயோட்டாவின் உலகளாவிய எஸ்யூவி பிரிவில் சிறந்த காராக வெளிவந்திருக்கிறது. இதில் ஆல்வீல் டிரைவ், சூரிய ஒளிபடும் மிகவும் அழகான மேற்கூரை, 17 இன்ச் அலாய் சக்கரங்கள், வயர் இல்லாத சார்ஜர், ஹெட்ஸ்அப் டிஸ்ப்ளே, 360 டிகிரி செயல்படும் கேமரா மற்றும் டொயோட்டாவின் ஐ-கனெக்ட் தொழில்நுட்பம் ஆகிய சிறப்பு அம்சங்களுடன் இந்தியர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் செல்ப்-சார்ஜிங் ஸ்ட்ராங் ஹைப்ரிட் எலக்ட்ரிக் கார், இ-டிரைவ் டிரான்ஸ்மிஷனுடன் இயங்குகிறது. இதன் காரணமாக இந்த கார் 40 சதவீத தூரம், 60 சதவீத நேரம் மின்சார சக்தியில் இயங்குகிறது. இதன் காரணமாக ஒரு லிட்டர் எரிபொருளில் 27.97 கிலோ செல்லும் திறன் கொண்டதாக உள்ளது. மேலும், நியோ டிரைவ் 1.5-லிட்டர் கே-சீரிஸ் எஞ்சின் உடன் மேனுவல் டிரான்ஸ்மிஷன் மற்றும் 2 டபிள்யூடி மற்றும் ஏடபிள்யூடி உடன் தானியங்கி கியருடன் வெளி வருகிறது.

வாடிக்கையாளர்கள் தங்கள் முன்பதிவுகளை www.toyotabharat.com/online-booking/ என்ற இணையதளத்தில் மேற்கொள்ளலாம் அல்லது அருகிலுள்ள டொயோட்டா டீலர்ஷிப்பிற்கு சென்று பார்வையிடலாம். மேலும் விவரங்களுக்கு www.toyotabharat.com <http://www.toyotabharat.com> என்ற இணையதளத்தை பார்க்கவும்.

# எஸ்ஏஆர் குழுமம் இந்தியாவின் மிகப்பெரிய ஈவி தொழில்நுட்ப மையத்தை உருவாக்குகிறது

சென்னை, அக்டோபர் 04 2022: எரிசக்தி சேமிப்பு மற்றும் சுத்தமான ஆற்றல் தொழில்நுட்பங்களில் முன்னணி நிறுவனமான எஸ்ஏஆர் குழுமம், ஈ.வி பேட்டரிகள், மேம்பட்ட பிஎம்எஸ், ஈ.வி கன்ட்ரோலர்கள், டிரைவ் டிரெய்ன்கள் மற்றும் மோட்டார்கள் ஆகியவற்றை சுற்றியுள்ள முக்கிய இ-மொபிலிட்டி தொழில்நுட்பங்களை உள்நாட்டிலேயே உருவாக்க, ஹரியானாவின் குருகிராமில், இந்தியாவின் மிகப்பெரிய ஈ.வி தொழில்நுட்ப மையத்தை உருவாக்கியுள்ளது.

லிவ்புர் மற்றும் லிவ்கார்ட் போன்ற பிராண்டுகளுக்குப் பின்புலமாக இருக்கும் இந்த எஸ்ஏஆர் குழுமம், அதன் லெக்ட்ரிக்ஸ் ஈவி பிராண்டுடன் மின்சார இரு சக்கர வாகன சந்தையில் நுழைவதாக சமீபத்தில் அறிவித்தது. இந்த தொழில்நுட்ப மையம், உயர்தர, நம்பகமான மின்சார இரு சக்கர வாகனங்களை தயாரிப்பதற்கு லெக்ட்ரிக்ஸ்க்கு தொழில்நுட்ப ஆதரவை ஆதரிக்கும் மற்றும் வழங்கும்.

சுமார் 300 கோடி ரூபாய் முதலீட்டில் உருவாக்கப்பட்ட இந்த தொழில்நுட்ப மையம், ஹரியானாவில் உள்ள மனேசரில் உள்ள நிறுவனத்தின் 1,00,000 சதுர அடி வளாக வசதியில் அமைந்துள்ளது. சமீபத்திய உபகரணங்கள் மற்றும் மென்பொருள் திறன்கள் நிறைந்த, இந்த ஈவி தொழில்நுட்ப மையம், எஸ்ஏஆர் இன் உள்ளக ஆர் & டி திறன்களை மேம்படுத்தும் திறவுகோலாக இருக்கும்.

இது, ஒரு மேம்பட்ட ஈவி பேட்டரி மற்றும் சார்ஜர் ஆய்வகம், பேட்டரி சோதனை வசதி மற்றும் பவர்டிரெய்ன் மற்றும் வாகனக் கட்டுப்பாட்டு அலகு ஆகியவற்றை உருவாக்குவதற்கான ஒரு கண்டுபிடிப்பு ஆய்வகத்தை உள்ளடக்கிய, ஒரு அதிநவீன வசதியாகும். நிஜ உலகில் உருவகப்படுத்துதல் கண்டுபிடிப்புகளை சோதிக்க, தடங்கள் மற்றும் உபகரணங்களைக் கொண்ட உருவகப்படுத்துதல் வசதிகளுடன் கூடிய பொறியியல் வடிவமைப்பு மையமும் உள்ளது.

டெக் சென்டர் குறித்து லெக்ட்ரிக்ஸ் ஈவி இன் நிர்வாக இயக்குநரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான கே.விஜய குமார் கூறுகையில், "எஸ்ஏஆர் குழுமம் எலக்ட்ரிக் டூவீலர் பிரிவில் நுழைவது ஒரு இயற்கையான விரிவாக்கமாக இருக்கிறது. மேம்பட்ட ஆர் & டி திறன்களுடன் மற்றும் ஆற்றல் சேமிப்பு மற்றும் மேலாண்மை துறையில் 35 ஆண்டுகளுக்கும் மேலாக குவிக்கப்பட்ட விரிவான அனுபவத்தின் மூலம், ஈவி இன் 'இதயத்தை' எவ்வாறு சரியாகப் பெறுவது என்பது எங்களுக்குத் தெரியும். இந்திய நுகர்வோருக்கு ஈ.வி மேற்கொள்ளுதலின் ஆபத்தை அகற்றுவதற்கான ஒரு தொலைநோக்கு பார்வையால் நாங்கள் உந்தப்பட்டுள்ளோம், இந்த தொழில்நுட்ப மையம் இதற்கு ஆதாரமாக இருக்கும். பேட்டரிகள், புத்திசாலித்தனமான பிஎம்எஸ் மற்றும் பலவற்றை உருவாக்குவதற்கான மேம்பட்ட ஆதாரங்களைக் கொண்ட இந்த மையம், எங்களின் நுகர்வோருக்கு ஈவிகளை தினசரி இயக்கிகளாக மாற்ற எங்களுக்கு உதவும்." என்று கூறினார்.

# புதியமுகம் காட்டும் யோகிபாபு முதன்முறையாக கதை திரைக்கதை வசனம் எழுதி நாயகனாக நடிக்கும் யோகிபாபு

சென்னை, அக்டோபர் 04 2022: தமிழ் சினிமாவில் தற்போது முன்னணி ஹீரோக்களுடன் இணைந்து பிஸியான நகைச்சுவை நடிகராகவும் அதே சமயம் செலக்டிவ்வான படங்களில் கதையின் நாயகனாகவும் நடித்து வெற்றிகரமாக இரட்டை குதிரை சவாரி செய்து வருபவர் நடிகர் யோகிபாபு.

இந்த நிலையில் நடிகர் என்பதை தாண்டி தற்போது புதிய அவதாரம் ஒன்றையும் எடுத்துள்ளார் யோகிபாபு. ஆம். தான் கதையின் நாயகனாக நடிக்கும் படம் ஒன்றில் முதன்முறையாக தானே கதை, திரைக்கதை, வசனமும் எழுதி இருக்கிறார் யோகிபாபு.

வில் அம்பு' படத்தை இயக்கிய இயக்குனர் ரமேஷ் சுப்ரமணியம் இந்த படத்தை இயக்குகிறார். லெமன்லீஃப் கிரியேஷன் சார்பில் ஆர் கணேஷ் மூர்த்தி தயாரிப்பில்



புரொடக்சன் நெ-3 ஆக தயாராகும் இந்த படத்தின் பூஜை இன்று இனிதே நடைபெற்றது. படத்தின் இசை அமைப்பாளர் இன்னும் முடிவாகவில்லை.

'இந்த படத்தில் கதாநாயகியாக சம்ஸ்கிருதி நடிக்கிறார். முக்கிய கதாபாத்திரங்களில் பெப்சி விஜயன், கே.எஸ் ரவிக்குமார், மனோபாலா, சிங்கம்புலி, சிங்கமுத்து, மொட்டை ராஜேந்திரன், மயில்சாமி மற்றும் பல முன்னணி நடிகர்கள் நடிக்கின்றனர்.

இந்தப்படத்தின் படப்பிடிப்பு சென்னையை சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற உள்ளது.

இதற்கு முன்னதாக லெமன்லீஃப் கிரியேஷன் நிறுவனம் தயாரிப்பில் புரொடக்சன் நெ-1 ஆக உருவாகி வரும் 'மலை' படத்தில் யோகிபாபு மற்றும் லட்சுமி மேனன் இருவரும் இணைந்து நடித்துள்ளனர்

மேலும் இயக்குனர் பா.ரஞ்சித்தின் நீலம் புரொடக்சன் நிறுவனத்துடன் இணைந்து அசோக் செல்வன், சாந்தனு பாக்யராஜ், கீர்த்தி பாண்டியன் மற்றும் திவ்யா துரைசாமி ஆகியோர் நடிப்பில் புரொடக்சன் நெ-2 ஆக உருவாகி வரும் படத்தையும் லெமன்லீஃப் கிரியேஷன் நிறுவனம் தயாரித்து வருகிறது. என்பது குறிப்பிடத்தக்கது.

தொழில்நுட்ப கலைஞர்கள் விபரம் கதை, திரைக்கதை, வசனம் ; யோகிபாபு இயக்கம் ; ரமேஷ் சுப்ரமணியம் ஒளிப்பதிவு ; அதிசயராஜ்.ஆர் கலை இயக்குனர் ; எஸ் ஜெயச்சந்திரன் படத்தொகுப்பு ; மு.காசி விஸ்வநாதன் ஆடை வடிவமைப்பு ; முதுல் ஹபீஸ் மேக்கப் ; ஸ்ரீதர் புரொடக்சன் எக்ஸிக்யூட்டிவ் ; கே.வீரமணி நடன ஒருங்கிணைப்பு ; தினேஷ் & சுரேஷ் சண்டை பயிற்சி ; ஃபயர் கார்த்திக் பாடலாசிரியர் ; விவேக் ஸ்டில்ஸ் ; சந்தோஷ் டிசைன்ஸ் ; தண்டோரா சந்துரு மக்கள் தொடர்பு ; ரியாஸ் கே.அகமது

# க்ரோமா வழங்கும் 'கனவுகளின் திருவிழா' உடன் தசரா பண்டிகையைக் கொண்டாடுங்கள்: உற்சாகமூட்டும் சலுகைகள், பயிற்சி பட்டறைகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புகளுடன் உங்களது கனவுகளைப் பூர்த்தி செய்யுங்கள்



சென்னை, அக்டோபர் 04 2022: மங்களகரமான, மிகவும் எதிர்பார்ப்புக்குரிய பண்டிகையான தசராவை ஒட்டி, டாடா குழுமத்தைச் சேர்ந்த, இந்தியாவின் முதலாவது மற்றும் நம்பிக்கைக்குரிய பல்வேறு பிரிவுகளிலான எலக்ட்ரானிக்ஸ் பொருட்களுக்கான மாபெரும் விற்பனை நிறுவனமான க்ரோமா ஒரு டிஜிட்டல் திரைப்படம், குழந்தைகளுக்கான கொலு உருவாக்கும் பயிற்சி மற்றும் எதிர்பார்ப்புக்குரிய சலுகைகள் மற்றும் பிரத்தியேக தள்ளுபடிகளுடன் கூடிய பண்டிகைக்கால விற்பனையை உள்ளடக்கிய கனவுகளின் திருவிழா பற்றி அறிவித்துள்ளது. தற்போது செயல்பாட்டில் உள்ள இந்த பண்டிகைக்கால விற்பனையானது ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், தெலங்கானாவிலுள்ள க்ரோமா விற்பனையகங்களிலும் க்ரோமா இணையதளத்திலும் 2022 அக்டோபர் 5-ம் தேதி வரை தொடர்கிறது.

இந்த கொண்டாட்டத்திற்கு மேலும் உற்சாகம் சேர்க்கும் வகையில் பயிற்சி பெற்ற நிபுணர்கள் மற்றும் குழந்தைகளுக்கான கலைஞர்களைக் கொண்டு ஒரு கொலு உருவாக்கும் பயிற்சிப் பட்டறையை நடத்துகிறது க்ரோமா. இந்த பயிற்சி 2022 அக்டோபர் 4 வரை நடைபெறவுள்ளது. குடும்பங்கள் ஒன்றிணைந்து செல்ஃபி எடுக்க வசதியாக க்ரோமா விற்பனையகங்களில் மாபெரும் அளவில் கொலு அமைக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த விழாக்கால கொண்டாட்டம் பற்றி க்ரோமா-இன்பினிட்டி ரிட்டெய்ல் லிமிடெட்டின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை நிர்வாக அலுவலர் திரு.அவிஜித் மித்ரா பேசுகையில், "இந்த விழாக் காலத்தில் க்ரோமாவில் உற்சாகம் பொங்குகிறது; சமீபத்திய சுதந்திர தினம் மற்றும் ஓணம் விற்பனையைப் போலவே நாடு முழுவதும் வலுவான இரட்டை இலக்க வளர்ச்சியை எதிர்பார்க்கிறோம். நாடு முழுவதுமுள்ள எங்களது விற்பனையகங்களில் சிறப்பான கேட்ஜெட்களை வாங்க வாடிக்கையாளர்கள் தயாராகவுள்ளனர். எங்களிடம் அபாரமான சலுகைகள் உற்சாகமூட்டும் கேட்ஜெட்கள் உள்ளன; இந்த விழாக் காலத்தில் எங்களது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சிகரமான அனுபவத்தை வழங்க எங்களால் முடிந்த அளவுக்கு முயற்சிப்போம்" என்று தெரிவித்தார்.

'ஃபெஸ்டிவல் ஆஃப் ட்ரீம்ஸ்' பிரச்சாரத்தை குடும்ப ஒற்றுமையை அடிப்படையாக கொண்டு மனதைத் தொடும் வகையில் கருத்துருவாக்கம் செய்திருப்பதோடு அதை தயாரித்தும் இருக்கிறது சோ சீர்ஸ் நிறுவனம். இந்த ஒரு நிமிட தொலைக்காட்சி விளம்பரம், தென்னிந்தியாவில் ஒளிபரப்பாக இருப்பதால் தென்னிந்திய சந்தையை மையமாக கொண்டு எடுக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த விளம்பரம் பிராந்திய மொழி வாடிக்கையாளர்களுக்காக தெலுங்கில் இருந்து தமிழ், மலையாளம் மற்றும் கன்னடம் மொழிகளுக்கும் ஏற்ற வகையில் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. உணர்ச்சிகரமான மற்றும் மனதிற்கு நெருக்கமான ஒன்றாக இருக்கும் இந்த வீடியோ, திருவிழாக்களின் போது ஒரு குடும்பத்தில் இருக்க வேண்டிய ஒற்றுமையின் முக்கியத்துவத்தையும் அதன் மீதான உணர்வையும் அழகுடன் சித்தரிக்கிறது. முதியவர் ஒருவர் கடந்த கால தசரா கொண்டாட்டங்களை நினைவுகூர்ந்து பார்க்கையில், தற்போது இருக்கும் குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவருடனும் சேர்ந்திருக்கும் ஒரு முழுமையான குடும்பப் படத்தைப் எடுக்கவேண்டும் என்று ஏங்குகிறார். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இருக்கையில் அப்புகைப்படத்தை இந்தாண்டு எப்படியாவது எடுத்துவிட மேண்டுமென ஆவலுடன் காத்திருக்கிறார்.